பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
31 08 2025 SUNDAY 7.15 PM
ஆகாஷவாணி
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உலகளாவிய பொருளாதாரம் சீராக இருப்பதை உறுதி செய்வதற்கு இந்தியா – சீனா ஒருங்கிணைந்து பணியாற்றுவது அவசியமாகிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. 2036-ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை இந்தியாவில் நடத்துவதற்கு உரிமை கோரப்பட உள்ளதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

3. பெண் கல்விக்காக பணியாற்றும் இந்தியாவில் உள்ள அறக்கட்டளைக்கு Magsaysay விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

4. நாட்டின் பல்வேறு பகுதிகளில் அடுத்த மாதமும் மழைப்பொழிவு இயல்பைவிட கூடுதலாக இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

5. உலக தடகள சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான 20 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

-இனி விரிவான செய்திகள்-

<<<<<<<<>>>>>

உலகளாவிய பொருளாதாரம் சீராக இருப்பதை உறுதி செய்வதற்கு இந்தியா – சீனா ஒருங்கிணைந்து பணியாற்றுவது அவசியமாகிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக சீனா சென்றுள்ள பிரதமர் இன்று Tianjin-ல் அந்நாட்டு அதிபர் திரு Xi Jinping -வுடன் பேச்சு நடத்தினார்.

*சீன உடனான நல்லுறவை பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையில் மேலும் வலுப்படுத்த இந்தியா விரும்புவதாகவும் அவர் தெரிவித்தார்.*

*இருநாட்டு மக்களின் நலனும் பரஸ்பர நல்லுறவை சார்ந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.*

*எல்லைப்பகுதியில் அமைதி நிலவிவருவது வரவேற்கத்தக்கது என்றும் அவர் கூறினார்.*

*இருநாடுகளின் சிறப்பு பிரதிநிதிகளுக்கு இடையேயான கூட்டத்தில் ஒருமித்த கருத்து ஏற்படுவதை அவர் சுட்டிக்காட்டினார்.*

*இந்தியாவில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பங்கேற்க வருமாறும் திரு நரேந்திர மோடி, சீன அதிபருக்கு அழைப்பு விடுத்தார்.*

*இதனைத்தொடர்ந்து, நேபாளம், மாலத்தீவு உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்களுடனும் பிரதமர் பேச்சு நடத்தினார்.*

*<<<<<<<<>>>>>*

*2036-ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியை இந்தியாவில் நடத்துவதற்கு உரிமை கோரப்பட உள்ளதாக மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் கூறியுள்ளார்.*

*இன்று மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் பி டி உஷா இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.*

நாடாளுமன்ற உறுப்பினர் விளையாட்டுத் திருவிழா வட மும்பையில் வரும் 21-ஆம் தேதி தொடங்கி, டிசம்பர் 25-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளதாக அவர் கூறினார்.

இதில் ஒரு லட்சம் பேர் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் திரு பியூஷ் கோயல் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

தேசிய விளையாட்டு தினம் மூன்று நாட்கள் கொண்டாடப்பட்டதன்மூலம், அது மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற மூன்று நாள் கொண்டாட்ட நிறைவு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

இந்த மூன்று நாள் கொண்டாட்டங்கள் 700 மாவட்டங்களுக்கு உட்பட்ட 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களில் நடைபெற்றதாக அவர் கூறினார்.

30 கோடிக்கும் மேற்பட்டோர் இதில் கலந்துகொண்டதாகவும் அமைச்சர் கூறினார்.

விளையாட்டுத்துறை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளையும் திரு மன்சுக் மாண்டவியா பட்டியலிட்டார்.

<<<<<<<>>>>>

டிஜிட்டல் இந்தியா இயக்கத்தின்கீழ், 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரசு மின்னணு சேவைகள், டிஜி லாக்கர் மற்றும் மின்னணு மாவட்ட தளங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

இதன்மூலம், 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்தவர்கள் தங்களது சான்றிதழ்களையும், அரசு நலத் திட்டங்களையும் எளிதாக பெற இயலும் என்று மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

நாட்டிலேயே மகாராஷ்ட்ரா அரசு 254 சேவைகளை இணையதளம் வாயிலாக வழங்குவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>

பெண் கல்விக்காக பணியாற்றும் இந்தியாவில் உள்ள அறக்கட்டளைக்கு Ramon Magsaysay விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

Educate Girls என்ற இந்த அறக்கட்டளை Ramon Magsaysay விருதை பெறும் முதலாவது இந்திய நிறுவனம் என்ற பெருமையை பெற்றுள்ளது.

தொலைதூர கிராமங்களில் உள்ள பெண்கள் கல்வி கற்பதற்காக இந்த நிறுவனம் பணியாற்றி வருகிறது.

<<<<<<<<>>>>>

பிற்படுத்தப்பட்ட வகுப்பை சேர்ந்தவர்களுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் 42 சதவீத இடஒதுக்கீடு வழங்க வகை செய்யும் சட்டத்திருத்த மசோதா தெலங்கானா சட்டப்பேரவையில் இன்று ஒருமனதாக நிறைவேறியது.

முன்னதாக, இந்த மசோதாவை தாக்கல் செய்து பேசிய முதலமைச்சர் திரு ரேவந்த் ரெட்டி, கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 42 சதவீத இடஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்பதில் தமது அரசு உறதியுடன் உள்ளதாக கூறினார்.

இதன்மூலம், தேர்தல் வாக்குறுதியை தமது அரசு நிறைவேற்றியிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த ஒதுக்கீடு வரும் உள்ளாட்சித் தேர்தலில் செயல்பாட்டிற்கு வரும் என்றும் திரு ரேவந்த் ரெட்டி கூறினார்.

<<<<<<<>>>>>

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கது என்று கர்நாடக முதலமைச்சர் திரு சித்தராமையா கூறியுள்ளார்.

இன்று மைசூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், ஈரடுக்கு வரி விதிப்பு முறை வரவேற்கத்தக்கது என்றார்.

இதன்மூலம் மத்திய அரசுக்கு ஆண்டொன்றுக்கு 15 ஆயிரம் கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்படும் என்றும் அவர் கூறினார்.

இதன் காரணமாக மாநிலங்களின் வருவாய் பாதிக்கப்படாமல் இருப்பதை மத்திய அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் திரு சித்தராமையா கேட்டுக்கொண்டார்.

<<<<<<<>>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, நாளை மறுநாள் தமிழகம் வருகிறார்.

சென்னையில் நடைபெறவுள்ள சிட்டி யூனியன் வங்கியின் நிறுவன தின கொண்டாட்டங்களில் அன்று அவர் பங்கேற்கிறார்.

இதனைத்தொடர்ந்து, வரும் புதன்கிழமை திருவாரூர் செல்லும் குடியரசுத் தலைவர், அங்குள்ள மத்திய பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்கிறார்.

<<<<<<<>>>>>

எந்தவொரு பிரச்சினைக்கும் அமைதி பேச்சுக்கள் மூலமே தீர்வுகாணப்பட வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாக உள்ளது என்று தில்லி சட்டப்பேரவைத் தலைவர் திரு விஜேந்தர் குப்தா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் உலக அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்கான கருத்தரங்கில் தொடக்க உரையாற்றுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

ரஷ்யா – யுக்ரைன் இடையேயோன பிரச்சினைக்கும் பேச்சுக்கள் மூலமே தீர்வுகாணப்பட வேண்டும் என்பதை பிரதமர் திரு நரேந்திர மோடி தொடர்ந்து வலியுறுத்தி வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

தொலைநோக்கு பார்வையுடன் கூடிய பிரதமரின் உறுதியான செயல்பாடுகள் சர்வதேச அரங்கில் இந்தியாவின் நன்மதிப்பை அதிகரித்துள்ளதாகவும் திரு விஜேந்தர் குப்தா தெரிவித்தார்.

<<<<<<<>>>>>

*பீகார் வரைவு வாக்காளர் பட்டியலில் ஏராளமான வாக்காளர்கள் இரண்டு முறை இடம்பெற்றிருப்பதாக வெளியான குற்றச்சாட்டுகள் தவறானவை என்று அம்மாநில தலைமை தேர்தல் அதிகாரி கூறியுள்ளார்.*

*சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், வரைவு வாக்காளர் பட்டியல் இறுதியானது அல்ல என்றும் தெளிவுபடுத்தினார்.*

*<<<<<<<<>>>>>*

*உத்தராகண்ட் முதலமைச்சர் திரு புஷ்கர் சிங் தாமி தலைமையில், உயல்நிலைக்குழு கூட்டம் இன்று டேராடூனில் நடைபெற்றது.*

*பேரிடர் மேலாண்மை குறித்து இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*13 மாவட்ட ஆட்சியர்கள் இதில் காணொலி வாயிலாக பங்கேற்றதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.*

*<<<<<<<<>>>>>*

*உத்தரப்பிரதேசத்தில் உள்ள பட்டாசு ஆலையில் நேரிட்ட வெடி விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர். ஐந்து பேர் காயமடைந்தனர்.*

*லக்னோ அருகே குடியிருப்புப்பகுதியில் சட்டவிரோதமாக செயல்பட்டுவந்த இந்த பட்டாசு ஆலையில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.*

*இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத்,*

காயமடைந்தவர்களுக்கு உயரிய சிகிச்சை வழங்குமாறு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

<<<<<<<<>>>>>

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அடுத்த மாதமும் மழைப்பொழிவு இயல்பைவிட கூடுதலாக இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இதன் காரணமாக, காட்டாற்று வெள்ளம் மற்றும் நிலச்சரிவு ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>

இதனிடையே, பஞ்சாப் மாநிலத்தில் மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

மழைவெள்ள பாதிப்பு காரணமாக, அனைத்து பள்ளிகளுக்கும் வரும் புதன்கிழமை வரை விடுமுறை அளிக்கப்படுவதாக அம்மாநில கல்வி அமைச்சர் திரு Harjot Singh Bains கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இதற்கான அறிவிப்பை வெளியிட்ட அவர், வெள்ள நிலைமை மேம்பட்டவுடன் பள்ளிகள் திறக்கப்படும் என்றார்.

இதற்கிடையே, மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப்பணிகளை மேற்கொள்வதற்காக மத்திய அரசு 60 ஆயிரம் கோடி ரூபாயை விடுவிக்க வேண்டும் என்று அம்மாநில அரசு வலியுறுத்தியுள்ளது.

<<<<<<<<>>>>>

## விளையாட்டுச் செய்திகள்

உலக தடகள சாம்பியன் போட்டியில் பங்கேற்பதற்கான 20 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

நீரஜ் சோப்ரா தலைமையிலான இந்த அணியில் பிரவீன் சித்ரவேல், குல்வீர் சிங் மற்றும் ரோஹித் யாதவ் உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

இப்போட்டி, டோக்கியோவில் வரும் 13-ஆம் தேதி தொடங்கி, 21-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

----------------

புனேயில் நடைபெற்றுவரும் சர்வதேச ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Shravani Walekar – Vansh Dev இணை பட்டம் வென்றது.

இன்று நடைபெற்ற கலப்பு இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 21-12, 21-13 என்ற செட் கணக்கில், இந்தியாவின் Lalramsanga – Taarini Suri இணையை வென்றது.

மகளிர் இரட்டையர் பிரிவில் Aanya Bisht-Angel Punera இணையும் பட்டம் வென்றது.

-----------

ஆசிய கோப்பை Climbing போட்டியில் இந்தியாவின் Deepu Mallesh Gowda இறுதிச்சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

கஜகஸ்தானின் Almaty-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் தகுதிச்சுற்றில் ஏழாவது இடத்தை பிடித்ததன்மூலம் அவர் இறுதிச்சுற்றுக்கு முன்னேறினார்.

----------------

*செக் குடியரசில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Harmeet Desai இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 11-2, 11-6, 11-5, என்ற செட் கணக்கில், ஜப்பானின் Sota Noda-ஐ வென்றார்.*

-----------------

*ஆசிய கோப்பை ஹாக்கிப்போட்டியில் இந்தியா 3-2 என்ற கோல் கணக்கில் ஜப்பானை வென்றது.*

*பீகாரின் Rajgir-ல் நடைபெற்ற இப்போட்டியில், ஹர்மன் பிரீத் சிங் இரண்டு கோல் அடித்தார்.*

--------------

*ஐக்கிய அரபு எமிரேட்டின் Fujairah-ல் நடைபெற்று வரும் சர்வதேச ஜூனியர் செஸ் சாம்பியன் போட்டியின் ஏழாவது சுற்று முடிவில், இந்தியாவின் பிரணவ் வெங்கடேஷ் முதலிடத்தில் உள்ளார்.*

*ஐந்தரை புள்ளிகளுடன் அவர் தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்கிறார்.*

--------------

*16 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆசிய கோப்பை கூடைபந்து போட்டி மங்கோலியாவில இன்று தொடங்கியது.*

*இந்தியா முதல் ஆட்டத்தில் லெபனானிடம் தோல்வியடைந்தது.*

*<<<<<<<END>>>>>*